[முற்பகல் 9.10]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: அந்தத் திட்டங்கள் எந்தக் காலத்திற்குள் எடுத்து முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: நான்கு திட்டங்களை இப்போது தான் ஆய்வு செய்துக் கொண்டிருக்கிறார்கள், ஆய்வு அறிக்கை வந்த பிறகு தான் எந்தத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரியும். அதற்குப் பிறகுதான் கால நேரத்தை நிர்ணயிக்க முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன்: அமைச்சர் அவர்கள் நான்கு திட்டங்கள் ஆய்வில் உள்ளதாகச் சொன்னார்கள். அந்த நான்கு திட்டங்கள் எவை எவை என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தொட்டஹள்ள நீர்த் தேக்கத் திட்டம், பெலஹள்ளா நீர்த் தேக்கத் திட்டம், சிக்ஹோளி நீர்த் தேக்கத் திட்டம், மல்லன்குளி நீர்த் தேக்கத் திட்டம். இந்த நான்கு திட்டங்களும் இப்போது ஆய்வு நிலையில் இருக்கின்றன.

தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணி

*வினா எண் 115—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்கால் நீண்டகாலமாக தூர் எடுக்கப்படாமல் இருப்பதால் கடைகோடியிலுள்ள விவசாயிகளுக்கு பாசன நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) பவானிசாகரைச் சார்ந்த தடப்பள்ளி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

பாலாபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைக்கும் திட்டம்

*வினா எண். 116— திரு. பூ. மு. நாசிம்மன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு தொகுதியைச் சேர்ந்த பாலாபுரம் கிராமத்திற்கு புதிய ஏரி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது எடுத்துக் கொள்ளப்படும்

1981 ஆகஸ்டு 31)

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி வட்டம், மேல்பாலாபுரம் கிராமத்தில் ஒரு குளம் அமைக்கும் திட்டத்திற்கான செயற் குறிப்பு தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

முகவை மாவட்டம், கம்பிக்குடி கட்டிக்குளம் கண்மாய்களை மேம்பாடு செய்யும் திட்டம்.

*வினா எண்.117—திரு. எம். பிச்சை: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) முகவை மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் கம்பிக்குடி கண்மாயையும், மானாமதுரை தொகுதியில் கட்டிக் குளம் கண்மாயையும் உலக வங்கியின் கடன் வழங்கு திட்டத் தின மூலம் மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை யில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்மிகுபு திரு. கே. இராஜா முகமது:— (அ) ஆம்

"(ஆ) கண்மாய்களை நவீனப்படுத்தும் திட்டத்தின்" கீழ் இக்கண்மாய்கள் முன்னோடி திட்டங்களாக எடுத்துக்கொள்ளப பட்டு கால்வாய்களில் சிமெண்ட் பலகைப்பதிக்காமல் ஏற்படும் நீர் கசிவு அளவு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இப் பரிசோதனைகள் முடிவுற்றபின், திட்டங்கள் எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. க பாரமலை: இத்திட்டங்கள் பொறுத்து முன்னோடித் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசோதனைகள் செய்யப் படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவை மிகவும் பாதிக்கப்பட்ட கண்மாய்கள் ஆகவே இந்த வேலைகள் விரைவில் துவக்கப்படவேண்டும். அப்போதுதான் வருகிற மழைக் காலத்தில் தண்ணீரை தேக்கி வைகக முடியும். சென்ற தடவை அந்தக் கண்மாய்ப்பாசனம் முழுமையிலும் பயிர்கள் விளைய வில்லை. ஆகவே அதை கருத்தில் கொண்டு இந்த வேலைகளைத் தீவிரமாகச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இந்தத் திட்டம் உலக வங்கியன் நிதியுதவி பெற்று 600 ஏக்கருக்கும் அதற்கு மேலாக உள்ள ஏககர்களுக்கு பாசன வசதி தரககூடிய வகையில 490 கண்மாய்களை சுமார் 120 கோடி ரூபாய் செலவில் தூர் எடுத்து கண்மாய்களின் கொள்ளளவை அதிகப்படுத்தி நவீன முறையில் பாசனவசதி செய்து தருவதற்காக எடுத்துக் கொள்ளப் படயிருக்கிற ஒரு திட்டத்தின் முன்னோடி திட்டமாகும். ஆகவே அவர்களால் வரையறுக்கப்படுகிற நிலையில்தான் இந்தத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டம்